Chapter X*XIII Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | **SC.No.469/2022** | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | **P.W.8** |
| | | Defence | |
| Name | | திருமதி.சாந்தி | |
| Husband's Name | : | திரு.வின்சென்ட் சாஜி | |
| Village | : | வள்ளியூர் | |
| Taluk | : | வள்ளியூர் | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி (காவல் ஆய்வாளர்) | |
| Age | : | 49 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 31st day of July 2026.

(1 எதிரி ஆஜர்.2 வது எதிரி எதிரிகள் ஆஜர் இல்லை. 2 வது எதிரி தரப்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது வள்ளியூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 2018 ம் ஆண்டு நான் நாங்குநேரி வட்ட காவல் ஆய்வாளராக 10.07.2018 ம் தேதி பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளர் திரு.சஜி அவர்களிடம் புகார்தாரர் பரமசிவன் என்ற சிவா கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று பதிவு செய்த நாங்குநேரி காவல்நிலைய குற்ற

எண். 215/2018, சட்டப்பிரிவுகள் 294(b), 323, 302, 506(ii) IPC வழக்கை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். புகார் தாரர் கொடுத்த புகார் மனு **அ.சா.ஆ.2** மற்றும் உதவி ஆய்வாளர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும். 10.07.2018 ம் தேதி காலை 9.30 மணிக்கு சம்பவ இடமான மஞ்சங்குளம் ஊருக்கு மேற்கே ஜீயர்குளம் வேட்டை மட்டும் முத்தையா என்பவர் வயலுக்குள் அமைந்து அருகில் இடங்களையும் அதன் சற்றுப்புறங்களையும் சாட்சிகள் முருகன் மற்றும் வானாமாமாலை ஆகியோர் முன்பு பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வைமகஜர் **அ.சா.ஆ.4** மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகும். பின்பு 10.45 மணிக்கு சம்பவ இடமான ஜீயர் குளம் வெட்டையில் உள்ள ரத்தம்பட்ட மண் மற்றும் ரத்தம்படாத மண் ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.6** ஆகும். கைப்பற்றப்பட்ட ரத்தம்பட்ட மண் மற்றும் ரத்தம்படாத மண் ஆகியவை **சா.பொ.1** மற்றும் **சா.பொ.2** ஆகும். பின்னர் 11.30 மணிக்கு சம்பவ இடத்தில் இருந்து முத்தையா வயலில் இருந்து ரத்தம்பட்ட மண் மற்றும் ரத்தம்படாத மண் ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்பு கைப்பற்றினேன். ரத்தக்கறை படிந்த லுங்கி, 416869397116 என்ற எண் கொண்ட எதிரி ஆறுமுகத்தின் ஆதார் அடையாள அட்டை மற்றும் KPT 1433572 என்ற எண் கொண்ட எதிரி சுடலைக்கண்ணுவின் வாக்காளர் அடையாள அட்டை போன்றவற்றை அதே சாட்சிகள் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.7** ஆகும். கைப்பற்றப்பட்ட முத்தையா வயலில் இருந்து ரத்தம்பட்ட மண் மற்றும் ரத்தம்படாத மண் **சா.பொ.3** மற்றும் **சா. பொ.4** ரத்தக்கறை படிந்த லுங்கி **சா.பொ.5**, 416869397116 என்ற எண்

கொண்ட எதிரி ஆறுமுகத்தின் ஆதார் அடையாள அட்டை **சா.பொ.6** மற்றும் KPT 1433572 என்ற எண் கொண்ட எதிரி சுடலைக்கண்ணுவின் வாக்காளர் அடையாள அட்டை **சா.பொ.7** ஆகும். பின்னர் சாட்சிகள் முருகன், வானமாமலை ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 13.00 முதல் 14.30 மணி வரை பஞ்சாயத்தார்கள் பரமசிவன், சண்முகசுந்தரம், முருகன், சுடலைக்கண்ணு, சுந்தரப்பாண்டி ஆகியோர் முன்பு சம்பவ இடத்தில் வைத்து பிரேத விசாரணை மேற்கொண்டேன். பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.8** ஆகும். பிரேத விசாரணை சாட்சிகளான அருள்நம்பி, ஆறுமுகம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டி வேண்டுகோள் கடிதத்துடன் காவலர் 2778 திரு.மணிகண்டன், என்பவர் மூலம் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் சாட்சிகள் பரமசிவன் என்ற சிவா, சுந்தரப்பாண்டி, முத்தம்மாள், முருகன், வானமாமலை, உதவி ஆய்வாளர் சஜி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் பிரேத பரிசோதனையின் போது பிரேதத்தில் இருந்து எடுக்கப்பட்ட ரத்தக்கறை படிந்த காப்பிநிற முழுக்கை சட்டை ஒன்று, ரத்தக்கறை படிந்த வெள்ளைநிற பனியன் ஒன்று, ரத்தக்கறை படித்த காக்கிநிற டவுசர் மாடல் ஜட்டி ஒன்று ஆகியவற்றை காவலர் திரு.மணிகண்டன் நிலையம் வந்து ஆஜர் செய்தததை படிவம் 95 மூலம் நீதித்துறை நடுவர் வள்ளியூர் அவர்களிடம் அனுப்பிவைத்தேன். அந்த படிவம் 95 **அ.சா.ஆ.9** ஆகும். கைப்பற்றப்பட்ட பிரேதத்தில் இருந்து எடுக்கப்பட்ட ரத்தக்கறை படிந்த காப்பிநிற முழுக்கை சட்டை ஒன்று **சா.பொ.8**, ரத்தக்கறை படிந்த வெள்ளைநிற பனியன் ஒன்று

**சா.பொ.9**, ரத்தக்கறை படித்த காக்கிநிற டவுசர் மாடல் ஜட்டி **சா.பொ.10** ஆகும். பின்னர் 11.07.2018 ம் தேதி சாட்சிகள் பரமசிவன் என்ற சிவா, அருள்நம்பி, ஆறுமுகம் ஆகியோருக்கு 164 குவிமுச வாக்குமூலம் பதிவுசெய்யவேண்டி நீதித்துறை நடுவர் வள்ளியூர் அவர்களிடம் வேண்டுகோள் விண்ணப்பம் கொடுத்தேன். அந்த வேண்டுகோள் விண்ணப்பம் **அ.சா.ஆ.10** ஆகும். பின்னர் பிரேத பரிசோதனையின்போது எடுக்கப்பட்ட ரத்தமாதிரிகளை ஆய்வுக்கு அனுப்பவேண்டி நீதித்துறை நடுவர் நாங்குநேரி அவர்களிடம் வேண்டுகோள் விண்ணப்பம் கொடுத்தேன். அந்த வேண்டுகோள் விண்ணப்பம் **அ.சா.ஆ.11** ஆகும். பின்னர் 13.07.2018 ம் தேதி அதிகாலை 4.30 மணிக்கு பெருவேம்புஉடையார் சாஸ்தாகோவிலின் அருகில் வைத்து எதிரி ஆறுமுகத்தை கைது செய்தேன். எதிரி ஆறுமுகம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 4.10 மணிக்கு சாட்சிகள் முருகன் மற்றும் சுடலைக்கண்ணன் ஆகியோர் முன்பு பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.12** ஆகும். காலை 6.30 மணிக்கு எதிரி ஆறுமுகம் ஓட்டி வந்த TN 72 R 6205 என்ற எண் கொண்ட TVS Centra இருசக்கர வாகனத்தை மேற்படி சாட்சிகள் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.13** ஆகும். கைப்பற்றப்பட்ட TN 72 R 6205 என்ற எண் கொண்ட TVS Centra இருசக்கர வாகனம் புகைப்படம் **சா.பொ.11** ஆகும். பின்னர் 7.15 மணிக்கு எதிரி ஆறுமுகம் அடையளாம் காட்ட சூரங்குடிக்கு மேற்கே உள்ள வடுகச்சிமதில் ஊருக்கு செல்லும் தார் ரோட்டின் கீழ்புறம் உள்ள முட்புதரில் சம்பவத்தின்போது இறந்த சுப்பையாவை வெட்ட பயன்படுத்திய வெட்டு அரிவாள் ஒன்று, எதிரி சம்பவத்தின்போது உடுத்தியிருந்த ரத்தக்கறை படித்த சாரம் மற்றும் சட்டை

ஆகிவற்றை அத்தாட்சியில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.14** ஆகும். கைப்பற்றப்பட்ட வெட்டு அரிவாள் ஒன்று **சா.பொ.12** மற்றும் எதிரி ஆறுமுகத்தின் ரத்தக்கறை படித்த சட்டை **சா.பொ.13** மற்றும் சாரம் **சா.பொ.14** ஆகும். பின்னர் சாட்சிகள் முருகன், சுடலைக்கண்ணன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 17.07.2018 ம் தேதி இறந்துபோன சுப்பையாவின் உடலில் இருந்து சேகரிக்கப்பட்ட ரத்தமாதிரியை காவலர் திரு.மணிகண்டன் என்பவர் மூலம் நீதிமன்ற உத்தரவின்படி திருநெல்வேலி அரசுமருத்துவமனையில் இருந்து பெற்று திருநெல்வேலி தடய அறிவியல் ஆய்வகத்தில் திலி/உயிர்/1388/2018, நாள் 17.07.2018 ம்படி ஒப்படைக்கப்பட்டது. சாட்சி காவலர் திரு.மணிகண்டனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 11.07.2018 ம் தேதி சங்கரன்கோவில் நீதித்துறை நீதிமன்றத்தில் சரண்டைந்த எதிரி சுடலைக்கண்ணு என்பவரை 25.07.2018 ம் தேதி 17.00 மணிக்கு போலிஸ் காவலுக்கு எடுத்து சாட்சிகள் சுடலைக்கண்ணு, சுடலைக்கண்ணு ஆகியோர்கள் முன்பு விசாரணை செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.15** ஆகும். எதிரி சுடலைக்கண்ணு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 18.45 மணிக்கு மேற்படி எதிரி வீட்டில் இருந்து எடுத்து ஆஜர்படுத்திய TN 72 AX 8962 TVS Starcity இருசக்கர வாகனத்தை அதே சாட்சிகள் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.16** ஆகும். அந்த TN 72 AX 8962 TVS Starcity இருசக்கர வாகனத்தின் புகைப்படம் **சா.பொ.15** ஆகும். மேற்படி சாட்சிகள் சுடலைக்கண்ணு, சுடலைக்கண்ணு ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 30.07.2018ம் தேதி ஜீயர்குளம் வெட்டையில் இருந்து கையப்பற்றட்ட ரத்தம்பட்ட மண், ரத்தம்படாத மண் மற்றும் முத்தையா வயலில் இருந்து கையப்பற்றட்ட ரத்தம்பட்ட மண், ரத்தம்படாத மண் மற்றும் ரத்தக்கறை படிந்த லுங்கி, 416869397116 என்ற எண் கொண்ட எதிரி ஆறுமுகத்தின் ஆதார் அடையாள அட்டை மற்றும் KPT 1433572 என்ற எண் கொண்ட எதிரி சுடலைக்கண்ணுவின் வாக்காளர் அடையாள அட்டை, ரத்தக்கறை படிந்த காப்பிநிற முழுக்கை சட்டை ஒன்று, ரத்தக்கறை படிந்த வெள்ளை பனியன் ஒன்று, ரத்தக்கறை படிந்த காக்கிநிற டவுசர் ஜட்டி ஒன்று ஆகியவற்றை நீதித்துறைநடுவர், நாங்குநேரி அவர்களிடம் ஒப்படைத்து பி.ஆர் நம்பர் பெறப்பட்டது. பின்னர் 31.07.2018ம் தேதி சாட்சிகள் பரமசிவன் என்ற சிவா, அருள்நம்பி மற்றும் ஆறுமுகம் ஆகியோரை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் வள்ளியூரில் ஆஜர் செய்து 164(5) குவிமுச படியான வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேற்படி 164(5) குவிமுச படியான வாக்குமூலங்கள் **நீ.மா.சா.ஆ.4** மற்றும் **நீ.மா.சா.ஆ.5, நீ.மா.சா.ஆ.6** ஆகும். பின்னர் 02.08.2018ம் தேதி எதிரி சுடலைக்கண்ணு சம்பவத்தின்போது உடுத்தியிருந்த வெள்ளைக்கலர் அரைக்கை சட்டை ஒன்று, வெள்ளைகலர், கருப்பு கலர் கட்டம்போட்ட சாரம் ஒன்று, சம்பவத்திற்கு பயன்படுத்திய சுமார் 45 செ.மீ நீளம், 12 செ.மீ நீளம் கொம்பு கைப்பிடி போட்ட ரத்தக்கறை படிந்த வெட்டு அரிவாள் ஒன்று ஆகியவற்றை நீதித்துறைநடுவர், நாங்குநேரி அவர்களிடம் ஒப்படைத்து பி.ஆர் நம்பர் பெறப்பட்டது. அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.17** ஆகும். மேற்படி சான்றுப்பொருட்கள் வெள்ளைக்கலர் அரைக்கை சட்டை ஒன்று, வெள்ளைகலர், கருப்பு கலர் கட்டம்போட்ட சாரம் ஒன்று, சம்பவத்திற்கு பயன்படுத்திய சுமார் 45 செ.மீ நீளம், 12 செ.மீ நீளம் கொம்பு கைப்பிடி

போட்ட ரத்தக்கறை படிந்த வெட்டு அரிவாள் **சா.பொ.16** முதல் **சா.பொ.18** ஆகும். பின்னர் அத்தாட்சியில் கைப்பறப்பட்ட சான்றுப்பொருட்கள் அனைத்தும் படிவம் 95 மூலம் நாங்குநேரி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த படிவம் **அ.சா.அ.18(எண்ணம் 6)** ஆகும். பின்னர் 06.08.2018 ம் ஆண்டு இறந்தவரின் பிரேதத்தில் இருந்து எடுக்கப்பட்ட ரத்தத்தை மதுரை ஆய்வகத்திற்கு பரிசோதனைக்கு அனுப்பவேண்டு நீதித்துறைநடுவர், நாங்குநேரி அவர்களிடம் வேண்டுகோள் விண்ணப்பம் கொடுத்தேன். பின்னர் 09.08.2018 ம் தேதி எதிரி ஆறுமுகம் பயன்படுத்திய TN 72 R6205 TVS centra இருசக்கர வாகனத்தை, எதிரி சுடலைக்கண்ணு பயன்படுத்திய TN 72 AX 8962 TVS starcity இருசக்கர வாகனத்தை ஆகியவற்றை நீதித்துறைநடுவர், நாங்குநேரி அவர்களிடம் ஒப்படைத்து பி.ஆர் நம்பர் பெறப்பட்டது. பின்னர் 10.08.2018 ம் தேதி சம்பவ இடமான ஜீயர்குளம் வெட்டையில்இருந்து எடுக்கப்பட்ட தடய பொருட்களுக்கு பி.ஆர். எண். 269/2018 பெறப்பட்டது. பின்னர் எதிரி சுடலைக்கண்ணு சம்பவத்தின்போது ரத்தக்கறை படிந்த வெட்டுஅரிவாள் பி.ஆர். எண். 271/2018 பெறப்பட்டது. மேற்படி அனைத்து தடயபொருட்களும் நீதித்துறை நடுவர் நாங்குநேரி அவர்களின் உத்தரவுப்படி திருநெல்வேலி தடய அறிவியல் ஆய்வகத்தில் காவலர் 2335 திரு.முருகன் என்பவர் மூலம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 11.08.2018 ம் தேதி பரமசிவன் என்ற சிவா என்பவருக்க சிகிச்சை அளித்து காய சான்றிதழ் வழங்கிய மருத்துவர் பென்னி, இறந்துபோன சுப்பையாவின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.செல்வமுருகன், காவலர் 2335 திரு.முருகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பரமசிவன்

என்ற சிவா என்பவரின் காயச்சான்று **அ.சா.ஆ.19** ஆகும். மருத்துவர் திரு.செல்வகுமார் அளித்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.20** ஆகும். பின்னர் 12.09.2018ம் தேதி சாட்சிகள் ஆறுமுகம், ஞானதாஸ், குருசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 08.10.2018ம் தேதி சம்பவத்தின்போது கைப்பற்றப்பட்ட தடய சொத்தை ஆய்வு செய்து அறிக்கை வழங்கிய அறிவியல் அலுவலர் திரு.விஜயேந்திரன் மற்றும் திரு.அருள்ராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர்கள் அளித்த தடய அறிவியல் அறிக்கை **அ.சா.ஆ.21** ஆகும். மேற்படி வழக்கின் சட்டப்பிரிவினை 294(b), 323, 302, 506(ii) IPC யில் இருந்து 294(b), 341, 323, 302 , 506(ii) r/w 34 IPC ஆக மாற்றம் செய்து சட்டமாறுதல் அறிக்கையினை நாங்குநேரி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டமாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.22** ஆகும். பின்னர் 10.10.2018ம் தேதி எனது புலன் விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-

நான் முதல் விசாரணையில் சொன்ன நாளில், நேரத்தில், இடத்தில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. சொன்ன நாளில், நேரத்தில், இடத்தில் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. சொன்ன நாளில், நேரத்தில், இடத்தில் வைத்து 1வது எதிரியை கைது செய்ததாகவும், அவர் தானாக முன்வந்து

ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தாகவும், அதன் அடிப்படையில் வழக்கு தடயங்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள தடயபொருட்கள், ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சரியான முறையில் புலன் விசாரணை செய்யாமல் ஒரு தலைபட்சமாக எதிரிகளுக்கு எதிராக குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 161 குவிமுசபடியான வாக்குமூலங்கள் நான் சொல்லிக்கொடுத்தன்பேரில் நீதிமன்றத்தில் சாட்சிகளால் அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 2 வது எதிரி கைது செய்ததாகவும், அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தாகவும், அதன் அடிப்படையில் வழக்கு தடயங்கள், பைக் ஆகியவை கைப்பற்றப்பட்டதாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. ஆதார் அடையாள அட்டை, வாக்காளர் அடையாள அட்டை அனைத்து எதிரிகளின் வீடுகளில் இருந்து எடுத்துவரப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் இறந்துபோன சுப்பையா, ஜீயர் வெட்டையில் வைத்து அடையாளம் தெரியாத நபர்களால் காயப்படுத்தப்பட்ட இறந்தார் என்றால் சரியல்ல. அவர் எப்படி, யாரால் காயப்படுத்தப்பட்டார் என்ற விவரம் யாருக்கும் தெரியாது என்றால் சரியல்ல. எந்த விதத்திலும் சம்மந்தம் இல்லாத எதிரிகளை இந்த வழக்கில் பொய்யாக சேர்ந்து இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது புலன் விசாரணை பொய்யானது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கு சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**